மௌனமௌனிக்கு

மொட்டுக்கை பு-2

Q23:416
N20
172543

422

ஏ / 1920

OFFICE OF THE ... 29 OCT 1920 MADRAS.

ஸ்ரீ சற்குருபாதந்துணை.

மஹாமஹ தீர்த்தமாட்சிமை.

இரண்டாம் பதிப்பு.

இது

இராமநாதபுரம் சமஸ்தானம் கமுதித்தாலூகா

பரளைச்செய்யூர்

மகா-ா-ா-ஸ்ரீ சித. நாகலிங்கம்பிள்ளையவர்கள் குமாரர்

சித. நா. சிதம்பரபிள்ளையவர்களால்

இயற்றப்பெற்று

மதுரை

தமிழ்ச்சங்க அச்சியந்திரசாலையிற்

பதிப்பிக்கப்பட்டது.

...ரி௵ ஐப்பசிமீ 1உ

Q23:4146
N20
17543.

உ

ஹரஹரிபிரம்மணேநம:

மஹாமக
தீர்த்தமாட்சிமை.

கரும்பாயிர விநாயகர்துதி.

சீர்பெருங் குடந்தைப் பதிதனி விருந்து செங்கரும் பாயிரங் கொண்ட
பேர்பெரு துதிக்கை கொண்டடி யவர்தம் பிறவியோடுறை யெலாஞ் சிதை
கார்பெறு கருணை மும்மத முற்றுங் கயமுக மலரடி கருதி [த்தி
ஏர்பெறு திருமா மகத்து நன் மகிமை யெடுத்தியம் புதற்கியா மிசைவாம்.

சுப்பிரமணியர் துதி.

காசியின்வீச மதிகமீ தென்னக் காட்டிய மகிமையாற் கும்ப
நாசியாங் குடந்தை நகரின்மா மகத்தின் நன்மையை யெடுத்துநா நவில
வாசமார்கடப்பந் தாரணி புயத்தில் வள்ளிமாத் தனம்பொதிந் திலங்குந் [வாம்
தேசிகன் முருகன் செய்யதாட் டுணைநன் துணையெனச் சென்னிசேர்த் திடு

திருக்குடந்தைமாநகரம்.

நெடிய கடல்சூழ்ந்த இப் பெரும்பூமியின்கண் திருவளர்ந்தோங்கும் பரதகண்டத்துள் எவற்றிற்கும் முதல்வராயுள்ளோரில், பெரியதவத்தையுடைய அகத்தியமகாமுனிவரது கமண்டலத்தினின்றும் வெளிப்பட்டுப் பூமிதேவியின்மார்பிற்றங்கிய நித்தியமாலையையொத்த காவேரியாறு பாயப்பெற்று நீர்வளம் நிலவளம் முதலிய பல வளங்களும் நிறைந்துள்ள சோழ

நாட்டில் வேயுறுதோளியாகிய ஸ்ரீமங்களாம்பிகை சமேத ஸ்ரீ ஆதிகும்பேஸ்வரர் நடுநாயகமாகத்திருக்கோவில்கொண்டெழுந்தருளியிருக்கும் புண்ணிய க்ஷேத்திரமாகிய மஹாமஹ க்ஷேத்திரமோ, நாயன்மார்களாற் பாடப்பெற்ற பல சிவ க்ஷேத்திரங்களும் ஆழ்வாராதிகளாற் பாடப்பெற்ற அநேகவிஷ்ணு க்ஷேத்திரங்களும் மஹாமஹ தீர்த்தம் பொற்றாமரைத் தீர்த்தம் முதலிய பல பிரபல புண்ணிய தீர்த்தங்களும் நிறைந்து மானிடப்பிறவி எடுத்தவர்களில் பக்தகோடிகள் பவமாகிய காரிருள் நீங்கிக் கடவுளருள்பெறுதற்குரிய செப்பற்கரிய மகத்துவம் தங்கியதாகும்.

மஹாமஹதீர்த்தமுண்டாகிய விதம்.

ஆதிகாலத்திலே உலகங்களிலுள்ள எல்லா உயிர்களுமழியும் யுகப்பிரளய முறுங்காலங்கிட்டியதையறிந்த பிரமன் மீளவும் ஜீவோற்பத்திகளைச்செய்யும்வகை தோன்றாது மயங்கித் திருக்கைலையங்கிரியில் வாசம் பூண்ட ஸ்ரீ பரமசிவனிடமேகி, எ பரப்பிர்ம்மசொரூபா! பிரளயகாலம் நெருங்கியதே எல்லா ஜீவகோடிகளும் தாவ்ரங்களும் நாசமெய்திடில் திரும்ப அவைகளை யெவ்வாறுண்டாக்குவேன் எனத் துதித்துவேண்டவும், உமாபதி, அருள் கூர்ந்து, எ! சரஸ்வதிமணாளா? நீர் இக்கிலேசத்தையகற்றிச் சிறிது பிருதிவியெடுத் தமிர் தம்வார்த்துப்பிசைந் தோர்குடமமைப்பித் ததனுள் ளமிர்தத்தாற் பிசைந்தெடுத்த பிருதிவியையிட் டதில் சிருஷ்டிக்கும்விதையைப்பொதிந்து பக்கங்களில் வேதாகமபுராணவிதிகாசமுதலியவைகளையு மிட் டக்குடத்தில் அமுர்தம் நிரப்பி யதிமேன்மையான மஹாமேருவின் தெக்ஷிணபாகத்துள்ள அடையாளமிட்டஇடத்தே தருப்பையாலமைத்த ஒரு உரியிட் டதில் வைத்திடுவாய் என உகக்கும் உத்தரவளித்தனர்.

அவ்வுத்தரவைக்கொண்ட சதுமுக னவ்வாறே குடம் செய்த தனு ளமைக்கவேண்டியவற்றை வழுவாதமைத் தக் குடத்தை நூலாற்சுற்றி மாவிலைக்கொத்தைக் குடத்தின்வாயில் வைத் ததன்மீது தேங்காயொன்றையுமிட்டுப் பூணூலும் கூர்ச்சமும் சாத்தி, சந்தனம் வில்வதளம் முதலியவைகளாலலங்காரம்செய் தர்ச்சித்து நியமப்படி பூசித்து மஹாமேருவிலே தெக்ஷிணபாகத்தே பார்வதீரமணன் திருவாய்மலர்ந்தருளியவாறு வைத்திருந்தனன்.

வைத்த சிலதினாட்களிற் புயற்காற்றோடு பெருமாரிபெய்து சராசரமனைத்தையும் ஜலமழிக்கவும் மலைகளெல்லாம் நீரில் மூழ்கவும் மகோன்னதமான மஹாமேருவும் முழுகி அமிழும்படியான பிரளயமுண்டாகி எழுந்தது.

பிரமதேவன் அம்மேருவில் வைத்திருந்த குடமானது கூர்ச்சம் யக்ஞோப வீதம் தேங்காய் உரி வில்வம், மாவிலை முதலியவைகளோடு பெருவெள்ளத் தேமிதந்து தெற்குத்திக்குக்கேகிற்று பின் வாயு அதைச் சற்று மேற்கேமோ தித்தள்ளவும் அதன்மேலிருந்த உரி, நூல், மாவிலை, தேங்காய், பூணூல், தருப்பை, வில்வம், சந்தனம் முதலிய தனித்தனி ஒவ்வோரிடத்திலும், விழ உவ்வவ்விடங்களில் அற்புதானந்த சிவமூர்த்தங்கள் தோன்றின. பல சிவ க்ஷேத்திரம் உண்டாவதற்குக்காரணமாதலால் இது க்ஷேத்திர பீஜகுடமென வுங்கூறப்பெறு மிக்குடத்தைக் காணப் பரமேசுவரன் ஜகத்தாருய்யும் பொருட்டு ஒரு வேடனுகத்தோன்றித் தமது பரிவாரதேவர்களுடன் பல்லிடங் களையுங்கண்டு களிகூர்ந்து மத்யார்ச்சுனக்ஷேத்திரத்திற்குக் குணதிசையில் நின்று குடதிசையைப்பார்த்துக் குடத்தைக்கண்டு யாவரும் கண்களிக்க, இக் குடத்திலுள்ள வமுதம் நாலாபக்கங்களும் வழிந்தோடக்கொட்டும்படி வேடிக் கையாகச் சில பாணங்களைப்பிரயோகிக்கும்படி அருகில் நின்ற தருமத்தைப் பேணிவளர்க்கும் சாத்தா தனது அம்பறாத்தூணியிலிருந்து ஓர் அம்பை எடுத்து பரமசிவன்கையில் கொடுக்கப் பெற்றெய்யும் போதிதனுலுடையா திக்குடம் என எய்தார். உடனே ஈசுவரன்விட்ட பாணமோ வமுதகுடத் தைச்சாடியு முடையாதிருக்கவே பாணங்கொடுத்த சாத்தா வுளம்நொந்துசிற் பதை வேடரூபராக வந்த பரமேஸ்வரன் கண்டு சாத்தாவின்மனத்துயரகற்றி ஒருபாணப்பிரயோகசாத்தா எனத் திருநாமஞ்சூட்டி இத்தலம் பாணவண் டுறையெனப்பேரடைகுகவெனவும் கிருபைபாலித்துச் சாத்தாவை யங்கமர்த் தித் தன் அம்பறாப் போதியிலிந்தோர் பாணம் எடுத்துச் சிறிதுதூரத்திற்குக் குடக்கே நண்ணி யக்குடத்திற்கு ஈசான்யதிசையில் நின்று வில்லை நாணேற் றிக் குடத்தைக் குறிபார்த்துத் தொடுக்கவும் அக்கணை அக்கணமே அதிவேக மாயேகிக் குடத்தின் வாயை யுடைத்துக் குடத்தையும் தலைகீழாய்ச் சாய்த்து குடமுடைந்து வாய்வளைய மாகாயத்தெழுந்து தென்கிழக்குப்பக்கத்தில் விழவே சிவலிங்கமாய்க் கோணேசரென்றபேராகியது. இத்தலமே குடவா யில். கிராதன் தனதம்பினல் குடமுடையும்படி பாணம் தொடுத்திட்ட மஹாஸ்தலமே பாணபுரி. அவ்விடத்துள்ள மூர்த்தியே பாணபுரீசுவரர். குடத்தில் நிரம்பவிருந்த அமுதமெல்லாம் கொட்டுண்டு நாற்புறமும் பர வியவுதக்கண்ணுற்ற கருணை வள்ளலாகிய எம்பெருமான் அமுத ஆற்றின் பின் தொடர்ந்துக் குடத்தையெடுத்து குடத்திற்கு நேர்குணதிசையிலும் சற்றுதூரமுள்ள தென்கிழக்குத்திக்கிலும் மஹாமாட்சிமைதங்கிய அமிர்தம் நிற்பதற்குப் பூமிதேவியை இடங்கொடுக்க எண்ணியபடியே இரண்டிடங்களி லும் நிலம் பிளந் திடம் நிலையாக வமுதம் நிற்கக்கொடுக்கவே மஹாமேன்மை தங்கிய மஹாமஹக்குளமும் பொற்றாமரைக்குளமென்ற ஹேமரிஷிதீர்த்தமு முண்டாகியதெனப் புராணங்கூறுகிறது.

மஹாமஹக்ஷேத்திரத்துள்ள ஆலயங்கள்.

சைவம், வைணவம் முதலிய பல சமயத்தார்களும் பேதமின்றி அருளைப் பெறும் குடமூக்கெனும் திருக்குடந்தை மற்ற க்ஷேத்திரங்களிலுஞ் சாலவும் பரிசுத்தப் புண்ணிய க்ஷேத்திரமாம். இதில் பிரதிவருஷ மாசிமாத மகநக்ஷத்திரத்தில் மகோற்சவமும் பன்னிரண்டு வருஷத்திற் கொருமுறை மஹாமஹமென்று உலகப்பிரசித்தியாய் முப்பத்துமுக்கோடி தேவர்களும் நாற்பத்தெண்ணாயிர ரிஷீஸ்வரர்களும் மகிழ, சதுர்முகப்பிர்மாவால் ஸ்ரீ மங்களநாயகிசமேத ஸ்ரீ ஆதி கும்பேஸ்வரருக்கு மகாமக உற்சவம்தேவகுருவாகிய வியாழபகவான் சிம்மராசியில்சேர்ந்து சூரியன் கும்பராசியில் மருவுமாதம் மகநக்ஷத்திரங்கூடிய பௌர்ணமியில் மகாமக தீர்த்தநீராடும் நாளை ஈருகவுடைய ஈரைந்துநாட்களும் ஐதீகப்பிரகாரம் நடைபெறுவதோடு மற்றுமுள்ள சிவ, விஷ்ணு க்ஷேத்திரங்களிலும் திருவிழாக்கள் நடைபெறும். மஹாமஹ க்ஷேத்திரத்தின் விஸ்தீரணமோ கிருதயுகத்தில் யோஜனை மூன்றும், திரேதாயுகத்தில் யோஜனை இரண்டும், துவாபரயுகத்தில் யோஜனை ஒன்றும், கலியுகத்தில் யோஜனை அரையுமாகவுடையதாயிருக்குமென்று புராணங்களிற் கூறப்பட்டுள்ளது. இம்மாட்சிமையுள்ள புண்ணியஸ்தலத்தின் கன்னியாதீர்த்தமாகிய பாபாபநோதனி என்னும் தீர்த்தத்து வடபால் நவகன்னிகைகளோடு ஸ்ரீமகாமக விஸ்வநாதரும், இத்திர்த்தத்தின் கீழ்கரையில் அபிமுக நோக்கிய ஸ்ரீ அபிமுகதீஸ்வரரும், இதன் குடகரையில் குணதிசைநோக்கிய ஸ்ரீ கௌதமேஸ்வரரும், இக்கன்னியா தீர்த்தத்து வடமேற்குமூலையில் வில்வவனத்தில் ஸ்ரீபாதாளலிங்கேஸ்வரராகிய நாகேஸ்வரரும், நாகேஸ்வரருக்கு வடக்கில் ஸ்ரீகாளத்தீஸ்வரரும், காளத்தீஸ்வரருக்கு நிருதிதிசையில் ஸ்ரீசோமேஸ்வரரும், சோமேஸ்வரருக்கு வடக்கில் ஹேமரிஷிக்குத் திருமகளாகவவதரித்த கோமளவல்லி சமேதரான அரவணையிற்பள்ளிகொண்ட ஸ்ரீ ஆராவமுதரும், ஆராவமுதர்க்குநேர் குடதிசையில் குடமூக்கில் தோன்றிய ஸ்ரீஅமுத ஆதிகும்பேசுவரரும், ஆதிகும்பேசுவரர் திருக்கோவில் திருமதிலுக்கு நிருதி திசையில் மாலதிவனத்தில் ஸ்ரீதூமகேதுமாமுனிவர் வேண்டுகோளுக்கனுக்கிரகிக்கக் காசியினின்றும் எழுந்தருளிய ஸ்ரீவிஸ்வநாதராகிய கம்பட்ட விஸ்வநாதசுவாமியும், ஸ்ரீ ஆதிகும்பேஸ்வரருக்கு வடபால் காவேரிநதியின் தென்கரையில் எழுந்தருளிய ஸ்ரீஆதிவராகப்பெருமாளும், இப்பெருமாளுக்கு வாயுமூலையில் காசிபருக்குக் கிருபைபாலித்த ஸ்ரீலெட்சுமிநாராயணப்பெருமாளும், காவேரிநதிக்கு வடகரையில் மதங்கர்க்கு அருளிய ஸ்ரீவரதராஜப் பெருமாளும், இந்த வரதராஜப்பெருமாளுக்கு வாயுமூலையில் ஸ்ரீகைலாசநாதரும், கைலாசநாதருக்கு அக்கினிமூலையில் ஸ்ரீபிரகளநாயகிசமேத ஸ்ரீபிரமபுரீசுவரரும், பிரமபுரீசுவரருக்கு நிருதிமூலையில் காவேரிநதிக்குத் தென்கரை

யில் எந்தப்பேய்பிடித்தவர் வந்தாலுமப்போதே அப்பேயாடும் சுபாவமுள்ள திவ்விய திருக்கோவில் கொண்டவராயும் பாஸ்கரருக்கருளியவராயும் விளங்கிய ஸ்ரீசக்கிரபாணிசுவாமியாகிய ஸ்ரீ நரசிம்மப்பெருமாளும், ஸ்ரீ சக்கிரபாணி சுவாமிக்கு நேர் குண திசையில் ஸ்ரீபாணபுரீசுவரரும், இதற்கு நிருதி திசையில் ஸ்ரீபிர்மாவும், ஆங்காங்குத் திருக்கோவில்கொண்டும் தீர்த்தவாவிகொண்டும் அணுகிய பக்தகோடிகளாகிய ஆன்மாக்களுக்கு அருள்செய்யவேண்டி யமர்ந்தனர். அவை ஜீவன் முக்திக்ஷேத்திரங்களாய் எந்நாளும பிரக்யாதிபெற்று பிரகாசித்துக்கொண்டிருக்கின்றன.

ஸ்ரீஆதி கும்பேஸ்வரர் ஆலயம்.

ஹேமரிஷி தீர்த்தத்து மேல்கரையில் ஸர்வதேஜோம்மயமாய்ப் பிரகாசித்து விளங்காநின்ற சாக்ஷாத் பரப்பிர்மம் பூவுலகெங்கும் உண்டான பிரளயகால வெள்ளத்தில், பிர்மாவினுடைய சிருஷ்டிபீஜம் முதலியவை சிதையா வண்ணம் பாதுகாக்க, பிர்மதேவனுக்கருளியபடி புண்ணியக்ஷேத்திரத்தின் மண்ணினாலமைத்த குடத்தினுள் வேதசாஸ்திர முதலியவைகளைவைத்து நடுவில் அமுதம் நிறைக்கப் பலவித பத்திரபுஷ்பங்களால் அர்ச்சித்து தர்ப்பையினால் உறியமைத்து இமயகிரியினுச்சியில் ஸ்தாபிக்க, பிரளயகாலத்து வெள்ளத்தில் அக்குடம் நிலைதவறி மிதக்க ஒருபுறம் பிரளயமொதுங்க பிரசண்டமாருதம் வீசியதில் ஆங்காங்கு சோவென்னும் சத்தமும் சுழற்சியும் கொண்டு தென்பால் வெகுதூரமுற்றுப் பூர்வசமுத்திரத்திற்குச் சற்றுக் குடதிசையில் குடத்தின்மேல் அலங்கரித்திருந்த கூர்ச்சம்விழ ஆங்கு சாட்சீசுரர் திருக்கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கின்றார். அந்தக்ஷணமே குட மிதனக்கினிமூலை சென்று தங்கவே மகாத்மியம்தங்கிய உத்தமக்ஷேத்திரமென அசரீரியும் வானவர்கள் ஸ்தோத்திரமும் ஜயபேரிகை முதலியனவும் உண்டாக வெள்ளப்பிரளயம் நீங்கித் தரையிலமருந்தருவாயில் அதன்மேலிருந்த தேங்காய் அதனக்கினி திசையில் விழுந்தது. அதுவே இப்போது விளங்கும் அபிமுகேசுவரர். அதனையடுத்து அக்குடத்திலணிந்திருந்த பத்திரங்கள்விழ அங்குப் பாதாளமுகநாயகர், நாகேசுவரர், என்ற பெயரோடும் எக்ஞோபவீதம் விழுந்தவிடம் ஸூத்திரநாதர் என்ற பெயரோடும் பிரகாசமாய்ப் பகவான் திருக்கோவில் கொண்டு எழுந்தருளியிருக்கின்றார். சிவபிரான் கிராதரூபமாய் வந்து பாணத்தாலெய்ய அவ்வமுதகுடத்தினின்று அமுதம் பரவி ஹேமபுஷ்கரணியும்

மஹாமஹதீர்த்தமும் உண்டாயின. அவ்வமுதம் பரவின ஒரு யோஜனை தூரமுள்ள ஸ்தலங்களைத்தான் வானவர்கள்முதல் யாவரும் புகழ்ந்து பாடிப் பஞ்சக்குரோச க்ஷேத்திரங்களென்று அருளியிருக்கிறார்கள். குடம் சிதைந்ததும் கிராத ரூபியாகிய எம்பிரான், கொஞ்சம் மணலும் மண்ணும் அமுதத்தோடுசேர்த்து மாசிமாதம் பௌர்ணமியன்று பகலில் ஏகலிங்கமாயமைத்துச் சிதைந்த குடத்தின்மீது ஸ்தாபித்து அவ்விலிங்கத்திற்கு அமுர்தத்தினால் சிறப்பாக அபிஷேகித்து நறுமண மலர்கள் பத்திரங்களால் அர்ச்சித்துக் கைலையினின்று மங்களஸ்வரூபியாகி விளங்கும் உமாமகேஸ்வரியை அழைப்பித்து ஸ்ரீஆதிகும்பலிங்கேசுவரருக்கு வடபால் வீற்றிருக்கச்செய்து முப்பத்துமுக்கோடி தேவர்கள் நாற்பத்தெண்ணாயிரம் ரிஷீசுவரர்கள் கின்னரர் கிம்புருடர் அஷ்டாதசருத்திராள் துவாதசாதித்யர் முதலியோர்களும் காண அந்நாள் விருஷபலக்கினத்தில் இவ்விலிங்கத்தினுள் ஐக்யமாயினார். படைப்புக்குக்காரணமான புராதன கடத்தில் கலந்ததினாலேயே இவருக்கு ஸ்ரீஆதிகும்பேசுவரரென்று திருநாமமுண்டாயது.

குடந்தைமாநகரைக் கும்பலிங்கரையங் கோதையாம் மங்களாம்பிகையை
மடந்தையார் கோயின் மன்னுநாகேச வள்ளலைப் பெரிய நாயகியை
விடம்பயில் கண்டச் சோமநாயகரை மேதகு சோமநாயகியை
நடம்புரிபாதக் காளத்தீ சரைஞா னம்பிகையைப் புகழ்ந்திடுவோம்.

ஸ்ரீசாரங்கபாணி ஸ்துதி.

அராவணைப்பள்ளி யமர்ந்தருளாராவமுதனைக் கோமளத்தாயை
இராவணன் குலத்தைக் கடிந்தகோதண்ட ராமனைச் சீதையையன்பர்
சிரவணத்தருளும் சக்கரகரனை விஜயையாந் தேவியை மறைமேற்
பிரணவத்துருவ ராகனைத் திருவைப் பேசியாம் பிறவிநோய் தணிப்பாம்.

ஸ்ரீசக்கரபாணி ஸ்வாமி ஆலயம்.

அநந்தகெருடவிஷ்வக்ஸேனாதிகள் சேவிக்க ஸ்ரீபூமிநீளாதேவிகளுடன் திவ்ய சிம்மாசனத்தில் ஸ்ரீவைகுண்டத்திலெழுந்தருளி விளங்கும் பகவான் நிர்ஹேதுக கடாக்ஷத்தாலே அர்ச்சாரூபியாய் பூலோகத்திற்கெழுந்தருளிச் சம்சாரிகளான சேதனர்களை உஜ்ஜீவிக்கச்செய்ய நினைத்தருள சர்வ ஜகன்மாதாவான லக்ஷ்மி பகவானுடைய திருவுள்ளத்தையறிந்து ஹேமபுஷ்கரணிக் கரையில் தபசு செய்துகொண்டிருக்கிற ஹேமரிஷிக்குப் புத்திரியாக அவதரித்தருளியிருக்கையில் ஜகத்சிருஷ்டி கர்த்தாவானபிர்மா, ஜகத்தைச் சிருஷ்டிக்கிற சக்தி தன்னைத்தவிர மற்றொருவருக்குமில்லை என்கிற கர்வத்தாலிழந்த சிருஷ்டிசக்தி மறுபடியும் தனக்குக்கிடைக்குமாறு வேண்ட, அவனைப்பார்த்து நீ ஆயிரம் அசுவமேதயாகஞ் செய்தாலும் நீங்காத தோஷமானது திருக்குடந்தை என்னும் க்ஷேத்திரம் சென்று ஒரு அஸ்வமேதயாகஞ் செய்தால் உடனேநீங்கும். சிருஷ்டி சக்தியையும் மீள அடைவாயென்று அசரீரிவாக்கு உண்டாயிற்று. உடனே பிர்ம்மா கும்பகோணக்ஷேத்திரத்தில் அஸ்வமேதயாகம் விக்கினமின்றி நிறைவேற்ற ஸ்ரீயப்பதியான பகவான் சக்கரத்தாழ்வானையனுப்பினார். அச் சுதர்சனாழ்வான்முகமாய் விக்கினமில்லாமல் யாகத்தைமுடித்து பிர்மஹத்யாதி பாபங்களைப்போக்குகிறதாய் காவிரியின் தென்பாகத்துள்ள சக்கர தீர்த்தக்கரையிலிருக்கும் எக்ஞவேதியில் பிர்ம்மாவினால் பிரார்த்திக்க சுதர்சனாழ்வான் எழுந்தருளியிருக்கையில் ஒருக்கால் சூரியன் சகல லோகங்களையும் பிரகாசிக்கச் செய்யும் சக்தி பகவத்கடாக்ஷத்தால் தனக்குக்கிடைத்ததென்பதை மறந்து தேவாதிகளைத் தன் காந்தியால் தகிக்க அவர்களந்த உபத்திரவம் பொறுக்கமுடியாமல், கும்பகோணம் ஸ்தலத்திலுள்ள ஹேமபுஷ்கரணிக்கரையில் வாசுதேவனுக்குத் தன்புத்திரியைக் கன்னிகாதானம் செய்வதற்காகத் தவஞ்செய்துவந்த ஹேமரிஷியுடன் சூரியனுடைய கர்வநிவர்த்திக்காகத் தவஞ்செய்துவந்தார்கள். பரம காருண்யரான பகவான் ஸ்ரீவைகுண்டத்திலிருந்து ஹேமபுஷ்கரணிக் கரைக்கு எழுந்தருளி ஸ்ரீபூமிநீளாதேவியுடன் "ஹேமரிஷிக்கும்" தேவர்

களுக்கும் ஸேவைசாதித்தருள, தேவர்களுடன் ஹேமரிஷி தன்புத்திரியாக அவதரித்த கோமளவல்லியெனும் நாமதேயமுடைய லட்சுமியை விவாகமகோத்ஸவத்துடன் பகவானிடத்தில் சமர்ப்பித்து எம்பெருமானை ஸேவித்து மனதுக்குத் திருப்தியுண்டாகாமையால் ஆராவமுதமென்னும் பொருள்படுகிற ஆபரியாப்தாமிருதம் என்கிற திருநாமஞ்சாத்தித் தாங்கள் சூரியனாலடையும் துன்பத்தையுமியம்பிப் பிரார்த்திக்க உடனே பகவான் பிர்மாவினுடைய யக்ஞவேதிகையிலிருக்கும் சக்கரத்தாழ்வானிடத்தில் பிரவேசித்து அஷ்டாயுதங்களைத்தரித்த எட்டுக்கைகளோடும் முக்கண்களைத்தரித்த பயங்கரமான திருமுகத்தோடும் ரக்தஜ்வலாகேசத்தோடும் ரக்தவஸ்திர ரக்த புஷ்ப ரக்தசந்தன ரக்தாபரண முதலியவைகளோடும் ரவுத்திராகாரத்துடன் சக்கரத்திலிருந்து வெளிவந்து சூரியகாந்தியை அபகரித்துவிட்டார். உலகங்கள் அந்தகாரமடைந்தன. பிரும்மாதி தேவர்கள் அந்தகாரத்தால் உலகங்கள் மலினமடைகின்றதைக்கண்டு அனுதாபத்தால் சக்கரத்திலெழுந்தருளியிருக்கும் பகவானைப் பிரார்த்திக்கையில் சூரியன் மிகவும்பயந்து பகவானைசேவித்துச் சரணகதி முத்திரையான அஞ்சலியுடன் பகவானைப்பார்த்து சிருஷ்டி ஸ்திதி சம்ஹார கர்த்தாவான தேவரீருடைய திருக்கண்மலரிலிருந்து உண்டான அடியேன் தேவரீரை மறந்து கர்வித்துமது அடியார்களான தேவாதிகளை வருத்தியதால் ஒளிகுன்றிச் சக்கரத்தால் தகிக்கப்பட்ட அடியேனுக்கு முன்போல ஒளியைக்கொடுத்து ரக்ஷிக்கவேண்டும். எனக்காக எடுத்த இந்த அவதாரத்துடன் பக்தஜனங்களின் அபீஷ்டங்களைத் தேவரீர் நிறைவேற்றி எனக்கு மறுபடியும் தேஜஸ்கிடைத்த இந்தக் கும்பகோணத்திற்குப் பாஸ்கரக்ஷேத்திரமென்கிற பெயர் விளங்கும்படி அனுக்கிரகிக்கவேண்டுமென்று பிரார்த்தித்து ஸ்தோத்திரம்செய்ய பரம தயாளுவாகிய சக்கரமத்தியஸ்தரான பகவான் உடனே சூரியனது இஷ்டப் பிரகாரம் அனுக்கிரகிக்க தேஜஸ் முதலியவைகளைப்பெற்ற பாஸ்கரன் ஆனந்தத்துடன் ஆலயப்பிரதிஷ்டைசெய்து பகவானை ஆராதித்து மாசி மாதத்தில் உற்சவம் செய்துவைத்தானென்பது ஸ்தலமகாத்மியம்.

ஈதன்றி ஸ்ரீராமர் ஸ்ரீவரதராஜர் ஸ்ரீசரநாராயணர் ஸ்ரீவேதநாராயணர் ஆலயங்களும் ஆங்காங்கு விளங்கியோங்கி வருகின்றன இவற்றிற்கும் மஹாமஹவிழா ஒருமையாய் நடந்தேறுகின்றது.

மஹாமஹத்திருவிழா.

படைப்பாதி யைந்தொழில்செய் பரசிவனைத் திருக்குடந்தை
இடைப்பான லங்கண்மலை யிறைவன்மக ளொடுகோணக்
குடப்பானு மகமிந்து குறைவிறிரு நாளின்கிழ
விடைப்பா லெழுந்தருள் விழாக்கால மிகுதகுதி,

ஸ்ரீ ஆதிகும்பேசுவரருக்குப் பிர்மாவானவர், மகாமக மகோற்சவத்தைச்
செய்யக் கங்கணம் பூண்டு, நிலவுபோன்ற வெள்ளிய திருநீறு தரித்த பரம
பதியான சிவபெருமான்முன் அஞ்சலியஸ்தராய் ஸ்தோத்தரித்துக் கிருபை
யைப்பெற்று, ஆனந்தசாகரத்திலாழ்ந்து, மகாமக க்ஷேத்திரமெங்கும் கமுகு
வாழைமுதலிய பல மரங்களாலும் மாவிலை முதலிய இலைகளாலும் மகரதோர
ணங்களாலும் அலங்கரிக்கச்செய்து ஸ்ரீ ஆதிகும்பேசுவரர், ஸ்ரீ மங்களாம்பிகை
ஸ்ரீவிக்நேஸ்வர், ஸ்ரீசுப்பிரமணியர், ஸ்ரீசண்டிகேஸ்வரர் முதலியவர்களுக்கும
தனித்தனி விதிப்படி ஆலயங்கள் கட்டுவித் தவ்வவ்விடங்களில் பிரதிஷ்டை
செய்து துவஜஸ்தம்பம், மணி, விருஷபம், பட்டாடை ஆகிய இவைகளா
லலங்கரித்துத் தூபதீப நைவேத்தியாதிகளுடன் துவஜாரோகணம் நடத்தி
மேலான பல்லக்குகள், யானை, குதிரை, இரத முதலியவைகளை நவரத்தி
னங்களால் சிறந்த மேன்மையதா யமைத்து, அமுதம் தங்கிய மகாமகத்தீர்த்
தத் தடாகத்தைப் பன்னிரண்டு கோணமாய், படித்துறைகள், சோடச
கோபுரங்களுடன் நேத்திரானந்தமா யமைத்து மகாமக மகோற்சவததில்
மேற்கூறிய வாகனாதிகளில் சுவாமி அம்மன் முதலியவர்களை ஆரோகணிக்கச்
செய்து திருவீதியில் பவனிவரும்போது வேதம், தேவாரம், திருவா
சகம், திருமந்திரம், முதலியவைகளின் கோஷங்களும் சங்கீத பண்டிதர்
களொலி, மேளவாத்தியங்களொலி, நடன நங்கையர்களாட்டம் முதலிய
எல்லாச் சிறப்புகளும் விண்ணுளோர் மண்ணுளோர் முதலிய யாவரும்
கொண்டாடத்தக்கதாய்ப் பத்துநாளுற்சவமும் தீர்த்தாடனத்தோடு நடை
பெறும்.

மஹாமஹத் திருக்குளம்.

உருவத்தில் பன்னிரண்டு கோணமுள்ள திருக்குளப் படித்துறையைச்
சுற்றிலும், தனித்தனி கோயிலும், கோபுரமுங்கொண் டெழுந்தருளியிருக்
கும் மூர்த்திகள் பதினாறுபேர்கள். அவர்கள் பெயர் கன்னியா தீர்த்தமுதல்
வலப்பக்க முறையே க-பிரம்மதீர்த்தேஸ்வரர், உ-முகுணதேஸ்வரர், ௩-தன
தேஸ்வரர், ௪-விருக்ஷபேஸ்வரர், ௫-அருட்சோமநாதேஸ்வரர், ௬ கோணேஸ்
வரர், ௭-பத்திகேஸ்வரர், ௮-பயிரவேஸ்வரர், ௯-அகஸ்தீஸ்வரர், ௰-வியா
ஸேஸ்வரர், ௰க-உமயபரகேஸ்வரர், ௰உ- ௰௩-பிர்ம
மேஸ்வரர், ௰௪-கங்காதரேஸ்வரர், ௰௫-முக்ததீர்த்தேஸ்வரர், ௰௬-க்ஷேத்திர
பாலேஸ்வரர் என்பவைகளாம். அது ஸ்ரீ ஆதிகும்பேஸ்வரர் ஆலயத்துக்கு
அக்கினி திக்கிலும், ஸ்ரீமகாமகவிஸ்வநாதர் கோவிலுக்குக் கன்னியா திக்கிலு
முள்ளது. இன்னும் கங்கை யமுனை முதலிய பல பிரபல தீர்த்தங்கள் கலக்
கப்பெற்றிருக்கிறது. இந்த மகாமக தீர்த்தத்தில் விதிப்படி படிந்தவர்களுக்கு
சாலோக சாமீப சாரூப சாயுச்சியபதவி கிடைக்குமென்பது நிச்சயம். மற்றும்
முக்தியையடைய விரும்பிய சுசீலன் மனைவி அசதிக்கு முத்தியையும், புத்
திரனை வேண்டிய ஹேஹய அரசனுக்கு ஆறு பிள்ளைகளையும், ஐந்து தாரங்களை
விவாகம் செய்துகொண்டிருந்தும் புத்திரனின்றி, அவர்களையுமிழந்து, ஆறுந்
தாரம் கற்பில் அருந்ததிக்கொக்கும் அருமையாகிய பெண்ணை மணந்து,
புத்திரனையடைந்து, அப்புத்திரனை, மூன்று திங்களிலிழந்த சுதன்மருக்குப்
புத்திரனையும், கலிங்கதேசத்து வீரவர்மராஜனுக்கு நல்ல புத்திரனையும்,
ஞானவான் என்ற அந்தணருக்கு மாதா பிதா மரணத்தாலுண்டான
பாபத்தை நீக்கி சகல ஐஸ்வர்யங்களையும் எட்டுப்புத்திரர்களையும் கொடுத்து
இறுதியில் சாயுச்சியபதவியையு மளித்ததும், பாகல்யநாட் டரசனாகிய எம

வாகு மனைவியைப்பிடித்த வேதாளத்தைப் போக்கிப்புத்திரனைக் கொடுத்ததும், இம்மஹாமக தீர்த்தமே.

பிரகஸ்பதி பகவானனவர் சிம்ம இராசியையுற்றுத் திங்களுடன் சேர்ந்து, சூரியன் கும்பராசியிலிருக்கும்போது ஈரேழுலகங்களிலுள்ளவர்களாலும் புகழப்பட்டதும், படிந்தவர்களது எல்லா வினைகளையுந் தீர்க்க வல்ல பலதீர்த்தங்களும் தத்தம வினை தீரத்தன்னிடத்தில்வந்து சேரத்தக்க பெருமைவாய்ந்தது மான இத்தீர்த்தத்தில் மஹாமஹ ஆண்டில் படிந்தவர்கட்கு முற்கூறியபடி எல்லாப்பலன்களும சித்திக்கும். அன்றி வேறு எத்தீர்த்தத்திற் படிந்தாலும், அவற்றில் தானதருமங்கள் புரிந்தாலும், அததனுக்குரிய பலன் கிடையா. எல்லாத்தீர்த்தங்களும் அளிக்கக்கூடிய எல்லாப்பலன்களையும் இது ஒருமிக்கக் கொடுக்கக்கூடிய தீர்த்தமாவதால் எல்லாத்தீர்த்தங்களிலும் மிகச்சிறந்த தென்றுபுராணம் கூறுகின்றது.

அறுபத்தாறுயிரங்கோடி புண்ணியதீர்த்தங்களின் முழுப்பலன்களையு மொருங்கே தருமிக்கன்னியாதீர்த்தமன்றி மங்கள கூவம, பொற்றாமரைக் குளம, சந்திரபுஷ்கரணி சூரியபுஷ்கரணி, பக்தபுரிவாவி, வராகக்குளம், சக்கர தீர்த்தம், பசவதீர்த்தம், ஹேமரிஷிதீர்த்த முதலிய, பல தீர்த்தங்களுமாங் காங்கு விளங்கிவருகின்றன. இவையெல்லாம் திருக்குடந்தைப்புராணம் வாசித்துணர்ந்தோர்கட்குத்தெளிவாய் விளங்கும்.

இவ், ஹரஹரிஹயன் க்ஷேத்திரமாகிய மகாமக க்ஷேத்திரம் ஸ்ரீ காங் ஸ்ரீ கயை ஸ்ரீ பிரயாகை ஸ்ரீ ராமேஸ்வரம் முதலிய புண்ணிய க்ஷேத்திரத் களினும் சிறந்து, அவைகளினும் வீசம்பங்கு அதிகமாகப் புண்ணியத்தைசி தரும் பெருமைவாய்ந்தது.

மஹாமஹ க்ஷேத்திரத்தின் மகிமைவளம் மருவுமுறை
மஹாமஹக் கணேசர்தாளை மனதினில் மகிழ்ந்துமன்னி
மஹாமஹ விஸ்வநாதர் மலர்ப்பதம் சிரமேற்கொண்டு
சுகாசுகஞ் சொல்லநல்ல சுரோத்திரங் கொள்வர்சான்றோர்.

இம்மாநிலத்தில், பூர்வம் செய்த புண்ணியத்தால் மோக்ஷமடைதற்கு இன்றியமையாத மானிடப்பிறப்பையடைந்து, பெரும் புண்ணியத்தையும் மோக்ஷசாம்பிராச்சியத்தையும் பெறமுயலும் சிவனடியார்கள், சிவனடியார்க்கு பக்தர்கள், விஷ்ணுபக்தர்கள், விஷ்ணுவடியார்க்கு பக்தர்கள், முதலிய இந்து சமயமரபினர்கள் பலரும், சிவன், மால், திருத்தொண்டர்கள், ஆழ்வார்கள் முதலிய பெரியோர்களின் அனுக்கிரகம் பெறவும், இகபர சுகபோகங்களைப் பெறவும் வேண்டுபவர்கள் இம்மாட்சிமைதங்கிய மகாமக க்ஷேத்திரத்தின் அங்க க்ஷேத்திரங்களாகிய குண திசையில் மத்யார்ச்சுனமென்னும் திருவிடை மருதூர் ஸ்ரீ மஹாலிங்கேஸ்வரர், அக்கினிதிசையில் திருநாகேஸ்வரம் ஸ்ரீ நாக நாதர். கமலலோசனிசமேத, ஸ்ரீ உப்பிலியப்பர் நிருதிதிசையில் தாராசத்திரம் எனப்பெயர் வழங்கிவரும் ருத்ராக்ஷவனம் ஸ்ரீ ஐராவதீஸ்வரர், வாயுதிசையில் சுவாமிமலை ஸ்ரீ சுவாமிநாதர், ஈசான்யதிசையில் பாடலவனம் ஸ்ரீ சுந்தரேஸ்வரர் ஸ்ரீ வெங்கடேசப்பெருமாள் ஆகிய இவர்களை விதிப்படி வணங்கி, திருவாலயங் களை வலமாகப்பிரதக்ஷணஞ்செய்து ஆங்காங்கு செய்யவேண்டியவைகளைச் செய்துகொள்ளவேண்டும். பின் பிரத்தியங்க க்ஷேத்திரங்கள் பதின்மூன்றுஞ் சேர்த்து ஆகப்பதினெட்டு க்ஷேத்திரங்களையுமடைந்து மூர்த்திகளை விதிப்படி

172543

வணங்கி கோயிலை பிரதக்ஷணம்செய்து மறுபடியும், மஹாமஹ க்ஷேத்திரத்துட்சென்று கொண்டவிவரத்தை ஆகமப்படி முடித்துக்கொள்ள கங்கை, யமுனை, சரஸ்வதி, சிந்து, நருமதை, கோதாவரி, வேகவதி, தாம்பிரவர்ணி முதலிய தீர்த்தங்களும் திக்குபாலகர் தீர்த்தங்களும், கன்னியாதீர்த்தங்களும் தன்னிடத்துக்கலந்த பெருமைபொருந்தியதும், ஆடவரும் நங்கையரும் எண்ணியபயனெலா மொருங்கே அளித்தருளும் மாட்சிமைதங்கியதுமான மகாமஹதீர்த்தக்கரைசேர்ந்து ஆண்டாண்டுள்ள தீர்த்ததேவதைகளைவணங்கி முறைப்படி சங்கல்பம்செய்துகொண்டு திவ்ய கனிகள் வெள்ளி பொன் முதலியவைகளை மகாமஹ தீர்த்தத்துக்களித்து ஸ்நானம்செய்தல்வேண்டும். பின் தன்னையத்தீர்த்தத்தால் புரோக்ஷித்துத் தூய்மைசெய்துகொண்டு ஆசமனம்செய்து பஞ்சகவ்யமருந்தி, தத்தம் சமயக்கொள்கைக்கேற்றவாறு சைவர்கள் திருநீற்றைச் சகல வினைகளையுந்தீர்க்கும் மருந்தென்றும், வைணவர்கள் திருமண் எல்லா வினைகளையும் தீர்க்கும் பரம ஔஷதமென்றும் நினைத்து, உண்மையான அன்புடன் சைவர்கள் பதினாறு ஸ்தானங்களில் திரிபுண்டரமாகவும் வைணவர்கள் பன்னிரண்டு ஸ்தானங்களில் ஊர்த்துவ புண்டரமாகவும் அங்கங்களில் அணிந்துகொள்ளவேண்டும். அணிந்துகொண்டபின் சைவர்கள் சிவாகமவிதிப்படி உருத்திராக்ஷமணிந்து சிவபிரானையும் சிவனடியார்களையும், வைணவர்கள் வைணவாகமப்படி துளவமாலையணிந்து விஷ்ணுவையும் ஆழ்வாராதியர்களையும், ஆழ்வாராதியர்கட்கடியவர்களையும், பயபக்தி விசுவாசத்துடன் அர்ச்சித்து, பணிந்து, இயன்றமட்டும் தானதருமங்கள் செய்து அறுசுவையுடன் அன்னமளித்துப் பின் சைவவைணவதிருக்கோவில்களையடைந்து உரியமூர்த்திகளை வணங்கி, அர்ச்சனை முதலியன செய்தல் வேண்டும். இவ்வாறு யாவரேனும் நீராடுவாரேயாகில் அவர் குலமும், அவர் புதல்வியைக்கொண்ட குலமும், மாதாபிதா குலமும், சிற்றன்னை குலமும், தங்கை தமக்கை முதலியோர் குலமும், பிதாவுடன் பிறந்தான் குலமும், அம்மான் குலமுமாகிய சப்தகுலங்களும் நன்மையைப் பெற்றுய்யுமென்பது புராணசித்தம். காஞ்சி காமகோடிபீடாதிபதியும், ஷண்மதஸ்தாபகரும், சந்திரமௌலீஸ்வரரை அர்ச்சிப்பவருமாகிய, ஸ்ரீசங்கராசாரிய ஸ்வாமிகள், இத்தலத்தின் குபேரதிசையில் காவேரித்தென்கரையில் சோழ மகாராஜனால்கட்டப்பெற்றமடாலயத்து இன்றும்வாசஞ்செய்துவருகிறார்கள். இம்மகாக்ஷேத்திரத்தின் மகிமையையும், நீர்வளம் நிலவளம் குடிவளமுதலிய பலவளங்களையும், இங்குள்ளவர்களின் நாகரீக நிலைமையையுங்கண்டு மடாலயமமைத்தார்களென்று ஊகிக்கிறார்கள்.

மஹாமஹப்பெண்களுக்குப் படைக்கிற நியமவிரதம்.

பழவினைகளுக்குத் தக்க ஜென்மமெடுத்த மானிடர்களில் ஆடவர்களுக்கும், பெண்களுக்கும் விரும்பியவரமெலா மீயக்கூடிய மஹாமஹ தீர்த்தத்தில் தன் கணவனிடம் பகைமைபூண்டவளும் மூழ்கிப் பூஜித்துவந்தால் கணவனிடத்துண்டாகிய பகைமையையொழித்து அவனை அவளொடு சேர்ப்பிக்கும், பெண்களில் காகவந்தி, கதலிவந்து, மிருதவந்தியாகிய இவர்கள் மக்களைப்பெற ஆசைகொண்டு தாம்தாமடைந்த மலட்டுத்தன்மை நீங்க மூழுகவேணுமென்று நினைத்து பயபக்தி விசுவாசத்தோடு சிலபெண்களைக் கூட்டிக்கொண்டு மகாமஹதீர்த்தமடைந்து அங்குள்ள மஹாமஹப் பெண்களின் ஆலயமுற்று, மூழ்கி நவகன்னிகைகளையு மூழுகச்செய்து அவர்களைச் சந்தனம், மஞ்சள், குங்குமமிவைகளால் அலங்கரித்துப் பூஜித்து,

பாயஸம் கொடுத்து, அவர்களுக்கு அறுசுவைகளுடன் சாப்பாடிட்டு, ஒவ்வொருவருக்கும் தாம்பூலமுடன் தக்ஷிணைகளுமீந்து, மூன்று தடவை அவர்களை வலமாகச் சுற்றிவந்து, ஒவ்வொருவரையும், ஒன்பது தடவை நமஸ்கரித்து, அவர்களிட முத்திரயுபெற்று, நவகன்னியா தீர்த்தத்துறையை யடைந்து ஒன்பது சுமங்கலிகளுக்கு எண்ணெய்கொடுத்து முழுகச்செய்வித்து மஞ்சள், குங்குமம் சந்தனம், புஷ்பமிவைகளைத் தக்ஷிணைகளுடன் இனிமையான பழங்களையும் வைத்து அவர்களொவ்வொருவருடைய மனமும் மகிழும்படி கொடுத்துத் தாமும் எண்ணெய்தேய்த்து ஸ்நானம்செய்து பாயசமருந்தி, மாலை நவகன்னியர்களாலயத்துக்கேகி நூறு திருவிளக்கேற்றிவைத்து ஒன்பது கன்னிகைகளுக்கும் வேறுவேறாக ஒன்பதுதேங்காய் முதலியன சமர்ப்பித்து அக்கன்னிகாதேவிகளுக்குத் தனித்தனி தங்களாலியன்றவாறு திருவிழாச்செய்துவைத்தெப்போதும்போலத் தமதில்லத்திற்கு வந்து அன்றிரவில் பூமியிற்படுத்து நித்திரைசெய்யவேண்டியது முறை. இப்படி நாலு சுக்கிரவாரத்திலேனும் நாலு மங்களவாரத்திலேனும் கார்த்திகைமீ சோமவாரங்களிலேனும், ஆவணி புரட்டாசி மாதங்களில் வருகிற வளர்பிறை நவராத்திரி தினங்களிலேனும் மார்கழிமாதத்திலேனும் பிரதிதினங்களிலேனும் பூஜித்துவந்தால் மக்கட்பேறுண்டாகி இன்பமனுபவிப்பார்களென்பது திண்ணம். இவ்விரத அனுஷ்டிப்பைக் கருதியுளோர் அந்நியதேசம், தீவாந்தரம், சிறுகிராமம், நகரம் முதலியவைகளிலெவ்விடத்திற்குச் சென்றிருந்தாலும் அவ்விடத்திவ்வண்ணமொன்பது கன்னிசாதேவிகளின் திருவுருவங்களைச்செய்து அவைகளை அன்புடன் முன்சொல்லியபடி பூஜித்துப் பின் சுமங்கலிகளையும் பூஜித்தால் பிள்ளைப்பேறுண்டாகுமென்பதற்குச் சற்றும் சந்தேகமில்லை. நீடித்தநாள் பக்குவமாகாமலிருக்கிற பெண்கள் மேலேசொல்லியபடி பூஜித்தால் பருவத்தைப் பெற்றுப் புருஷனைக்கூடி, நற்குழந்தைகளைப்பெற்றுத் தன்கணவன், மாமனார் மாமியார், நாத்தியார் முதலானவர்களோடு மிகுந்த ஆனந்தமடைவார்கள்.

மஹாமஹதீர்த்த ஸ்நான நியமம்.

மாநிலமெங்கும் மலவிருள்நீக்கு மாட்சிமையையும் புகழையுங்கொண்ட மகாமகதீர்த்தத்தடாகத்தைச்சூழ்ந்து பன்னிரண்டு கோணமாயமைந்த படித்துறையிலுள்ள ஸ்நானகட்டங்களாவன: ஸ்ரீகாசியினின்று, நவகன்னிகைகளுடன், விசாலாட்சிசமேதராய், எழுந்தருளிவந்த மஹாமஹவிஸ்வநாதர்சந்நிதிக்குத்தெற்கிலுள்ள நவகன்யாதீர்த்தமுதல் முறையே வலமாக 2 கங்காதீர்த்தம், 3 பிரமதீர்த்தம், (விசாலாக்ஷியம்மை சந்நிதியில் விளங்கும்) 4 யமுனைதீர்த்தம், 5 குபேரதீர்த்தம், 6 நர்மதாதீர்த்தம், (அரசமரத்தடியில் விளங்கும்) 7 ஈசான்யதீர்த்தம், 8 சரஸ்வதிதீர்த்தம், (நடுவில்) 9 அறுபத்தாறுகோடி தீர்த்தம் (ஸ்ரீஅபிமுகேஸ்பரர் சன்னிதியிலுள்ள) 10 இந்திரதீர்த்தம், 11 கோதாவரிதீர்த்தம், 12 அக்கினிதீர்த்தம், 13 காவேரிதீர்த்தம், 14 யமதீர்த்தம், (ஸ்ரீகௌதமேஸ்வரர் சன்னிதியில்) 15 குமரிதீர்த்தம், 16 நிருதிதீர்த்தம், 17 க்ஷீரநதிதீர்த்தம், 18 வருணதேவன்தீர்த்தம், 19 தேவதீர்த்தம், 20 சுகர்தீர்த்தம், 21 சரயுதீர்த்தம், ஆகிய இருபத்தொரு தீர்த்தக்கட்டடங்கள் முறையே ஒன்றின்பின்னொன்றாயமைந்திருக்கின்றன. சுவர்க்க மத்ய பாதாள வாசிகளெல்லாம் இம்மஹாமஹதீர்த்தத்தில் நீராடும் காட்சியைக் காணும்பொருட்டும், நீராடுபவர்கட்கு விரும்பிய பதவிகளை கொடுக்கும் பொருட்டும் ஒரு வருஷத்திற்கு முன்னே, ஒவ்வொரு தேவாம்சமாகி வந்து இம்மகாக்ஷேத்திரத்தில் வாசங்கொள்வதாலும், நவதீர்த்ததேவதைகளும் இம்

மஹாமஹதீர்த்தத்தில் சமபகுதியாய்க்கலந்துறைந்திருப்பதாலுஞ் சகல புருஷார்த்தங்களையும் தரும் என்பதிலையமில்லை. மேலும் கொடிய நோய் கொண்டவர்கள் முழுகினாலும் நோய்தீர்ந்து அவர்களுக்கு பக்தி, யறிவு, திடகாத்திரம் முதலிய பலவும் உண்டாகும். இப்பெருமைவாய்ந்த தடாகத்தை ஒருமுறை பிரதக்ஷணம் செய்தபலன் மஹாமேருகிரியையும் பூமியிலுள்ள இதரக்ஷேத்திரங்களையும் நூறுதடவைகளில் பக்தியாய் வலஞ்செய்துவந்த பலனுக்குச் சமமாம்; யாவரேனு மித்தீர்த்தத்துக் கொருமுறை நமஸ்காரஞ்செய்வாராகில் அவர்க்கு ஸ்ரீமந்நாராயணனையும் சிவபிரானையும் நூறுமுறை நமஸ்கரித்த பலனுண்டாகும். மக்கட்பேற்றை விரும்பினானொருவன் மாசிமாதத்துத் தீர்த்தாடனதினத்தில் ஐந்து தடவை முறையாக ஸ்நானஞ்செய்து சமையாசார சின்னங்கள் தரித்து பிராமணர் முதலியோர்களுக்குத் தானதருமங்கள் செய்தால் நற்புத்திரர்களைப் பெற்றுய்வான். இத்தீர்த்தத்தில் ஸ்நானம் செய்யும் நியமத்தை யாவரும் அறியவேண்டியதவசியம். நான்கு ஆச்சிரமத்தார்களிலெவர்களேனும் முதல்நாளித்தீர்த்தத்தில் ஸ்நானம் செய்து, விப்ரர்களால் புண்ணியாகவாசனம்செய் தத்தீர்த்தத்தால் தன்னைப் புரோக்ஷித்துத் தூய்மைசெய்துகொண்டு அதில் சிறிது ஜலமும், பஞ்சகவ்யமுமருந்தி உடனே சில பிராமணர்களுக்கு ஷட்வர்க்கச்சுவைகளுடன் சாப்பாடிட்டு, பாயஸம், பலகாரங்கள் முதலியவைகளை வேண்டியமட்டுமுண்ணச்செய்தல்முறை. பின் அவர்களுக்கு தக்ஷிணை, தாம்பூலம், புதுவேஷ்டி முதலியவைகளைத்தந்து சந்தனம் நறுமலரிவைகளால் விதிவழுவாது பூஜித்து, நமஸ்காரம்செய்து, அவ்விப்ரர்களது கிருபையைப்பெற்று, குருவையும பூஜித்து உத்திரவுபெற்றுத் தெய்வத்தைத்துதிப்பதைத்தவிர வேறுவிருப்பமில்லாதவனாய், உப்பு, புளி, உரப்பு, தாம்பூலம், சௌளம், பெண்போகம், நகங்கிள்ளல், தீயவர்களுடன் கூடிப்பேசுதல், தகாதபக்ஷணம், பழையசாதமுண்ணல், சூத்திரர், ஸ்திரீ, நாய் இவர்களுண்ணஇட்டமீதி அன்னம, பக்ஷணமுதலியவைகளை உண்ணல் முதலான அநாசாரங்களை நீக்குதல் வேண்டும்.

அவ்வாறு ஒருநாளைக்கு ஒருபோதுண்டு, தரையில் நித்திரைசெய்து, மறுநாட்காலையில் மஹாமஹதீர்த்தத்தில், ஸ்நானம் செய்து விப்ரர்களைப்பணிந்து தங்கள் தங்கள் வழக்கப்படி ஜபங்களைச்செய்து, நித்ய கர்மானுஷ்டானங்களை முடித்துக்கொண்டு கோவில்களுக்குப்போய்த் தெய்வங்களை வணங்கவேண்டும். இவ்வாறு காலை முழுக்கானவுடன் நடுப்பகலுமிப்படியே தீர்த்தமாடி தேவதர்ப்பணமும், பிதுர் தர்ப்பணமும், இரிஷிதர்ப்பணமும் இத்தீர்த்தத்தில் செய்து, தேவயக்யம், பூதயக்யம், பலிஹோமங்கள் முதலியன செய்து அந்தணர்களுக்கு அன்னம் அறுசுவைகளோடிட்டுத் தாமும் ஒருமுறை அவிஸ் அருந்தி இரவு தரையில்படுத்து உறங்கவேண்டியது. மூன்றாந்தினம் காலையிலெழுந்து தீர்த்தக்கரை நண்ணி ஸ்நாநம்செய்து தீர்த்தக்கரைகளிலுள்ள தேவதைகளையும் பிரதக்ஷணமாக வந்து நமஸ்காரம் செய்து பூஜித்து அவர்களின் கிருபையைப்பெற்று, நவகன்னியர்களின் ஆலயத்துக்கேகி நவகன்னிகாதேவியார்களை விதிப்படி பூஜித்து அரசமரத்தைப் பிரதக்ஷணம் பண்ணித் தீர்த்த தேவதைகளை நமஸ்கரித்து விதிதவறாமல் சங்கற்பம்செய்து நல்லகனிகள், பொன், வெள்ளி முதலியவைகளைக் கைநிரம்பக்கொண்டு தீர்த்தத்துக்கிட்டு ஸ்நாநம்செய்யவேண்டியது. தனவந்தர்களானால் இரண்டு முறங்களிரண்டு ரவிக்கைத்துண்டுகளிட்டு அதன்மேல் சந்தனம், மஞ்சள், குங்குமம், நறுமலர், தாம்பூலம், பொன் வெள்ளி நாணயங்கள் வைத்துத்தீர்த்தத்திலிட்டு நீராடுவது வழக்கம். விதிப்படியே ஸ்நானம்செய்தபிறகு ஸ்நா

நாங்கமாகிய தருப்பணங்களை முடித்துக் காய்ந்தவஸ்திரமுடுத்திச் சமயாசார சின்னங்கள் தரித்துத் தங்கள் தங்களனுஷ்டானப்படி ஜபம்செய்து நவகன்னியாதேவிகளின் சந்நிதிகளையடைந்து, அரசவிருக்ஷத்தை வலம்வந்து அந்நிழலிலிருந்து ஒன்பது கன்னிகைகளுக்கும் முன்சொல்லியபடி இரண்டிரண்டு முறங்களில் பதார்த்தங்களை நிறைத்துக்கொடுத்து செவ்வையாய்ப் பூசித்துத் தக்ஷிணை, தாம்பூலம், பாயஸமுமீந் துண்ணும்படிசெய்தபின் பிராமணர்களுக்குச் சாப்பாடிட் டுண்பிக்கச்செய்து ஸ்ரீ ஆதிகும்பலிங்கேசுவரர், ஸ்ரீசோமேஸ்வரர், ஸ்ரீசாரங்கபாணி, ஸ்ரீசக்கரபாணி முதலிய ஆலயங்களுக்குச் சென்று பிரதக்ஷணம் புரிந்து, நமஸ்கரித்து, அர்ச்சனைகளும் புரிந்து வீடுற்று ஓர்முறை பூஜித்துத் தரையில் நித்திரைசெய்யவேண்டும். நான்காம்நாள் காலையிலும் தீர்த்தக்கரைசேர்ந்து பிதிர் தேவதைகளுக்குப் பக்தியாய்ச் சங்கற்பித்து, தலைமாத்திரம் க்ஷௌரம்பண்ணிக்கொண்டு முழுகிச் சமையாசார சின்னங்கள் தரித்துக்கொண்டு தங்கள்தங்களாலியன்றவாறு பொன் தானமீந்துப் பால்பழமருந்தி அன்னமுண்ணாமலிருந்து ஐந்தாம் நாள் பிதிர்தேவதைகளுக்குப் பிண்டார்ப்பணம் செய்து சிரார்த்தமும் செய்குவர் சான்றோர். மகாமஹ தீர்த்தஸ்நாந அங்கமாகப்புரியும் சிராத்தங்கள், தீர்த்த சிராத்தங்களே. இவ்விதம் புரிந்து வீடுற்றுப் பிராமணர்களுக்குச் சாப்பாடு செய்துவைத்துத் தங்கள் தங்கள் பந்துக்கள் இஷ்டமித்திரர்களுடன் உணவருந்தி விரத சாமாப்தி புரிகிறவர்களிவ்வுலகத்தில் புத்திரமித்திர களத்திராதிகளுடன் தனதான்ய விருத்திபெற்று ஹரஹரி பக்தியும் ஞானவைராக்கியமுமடைவதுடன் பரத்தில் நித்யானந்த இன்பவீடாகிய சாயுச்யமும் பெறுவரென்பது திண்ணம். அந்தந்தத்தீர்த்த தேவதைகளை வணங்கி ஸ்நாநம் செய்யும் மூறை பின்வரும் ஆனந்தக்களிப்பினாலறிக.

ஆனந்தக் களிப்பு.

மஹாமஹ மஹாமஹந்தன்னில்—மாட்சிமை
மஹாமஹ மஹாமஹ மஹாமஹந்தன்னில்.

1. விண்ணோர் நிறைந்தாடு தீர்த்தம்—இந்த
மேதினியோர்கள் வியப்புறும் வண்ணம்
தண்ணீருருக்கொண்டு வந்து—கடல்சூழ்
தாரணியில வந்து சமைந்ததுமானே (மஹா)

2. விந்தை மஹாதீர்த்தந் தன்னில்—காசி
விஸ்வநாதர் சன்னிதியில் நவகன்னியா தீர்த்தம்
இந்திரதீர்த்தம் பின்தோய—திவ்ய
யீசனபிமுக சந்நிதி மானே (மஹா)

3. மூன்ருவதக்கினி தீர்த்தம்—அதில்
மூழ்கியே யமதீர்த்தம் நண்ணியே நாவில்
நான்கொன்றில் நிருதிமா தீர்த்தம்—ஆடி
நாலிரண்டில் வர்ணதீர்த்தந் தோய்மானே (மஹா)

4. ஏழாவது பிர்மதீர்த்தம்—படிந்
தெட்டாவது தேவதீர்த்தமேயாடி
பேழாதி நிறைதிவ்ய குபேரன்—தீர்த்தம்
பேணியே யொன்பதாய்ப் படிந்தாமோனே (மஹா)

5. இருமாப்பின்றீ சான்ய தீர்த்தம்—பத்தில்
இசைந்து பசுபதி திருமரஞ்சுற்றி
அருமஹாமஹ புஷ்கரணி—நடுவில்
அறுபான றுகோடி தீர்ந்தந்தோய்மானே (மஹா)

6. பனிரண்டாவது கங்காதீர்த்தம்—படிந்து
பலவினைகளனைத்தும் பற்றற தூர்த்தம்
இனி தசமூன்றமுனு தீர்த்தம்—மூழ்கி
ஈரேழில் நற்மதா தீர்த்தந்தோய்மானே (மஹா)

7. பதினைந்தாய் சரஸ்வதி தீர்த்தம்—மூழ்கி
பதினாறில் கோதாவரி தீர்த்தமாடி
பதினேழில் பொன்னிநீராடி—ஆங்கு
பரிவாக சங்கல்ப முறைவழி மானே (மஹா)

8. பதினெட்டில் குமரிமாதீர்த்தம்—தோய்ந்து
பத்தொன்பதாய் சீராப்பதி தீர்த்தமாடி
பதிவாகவே சரயு தீர்த்த—பிரு
பானிற்படிந்து தேவதீர்த்தந் தோய்மானே (மஹா)

9. இந்தமுறை வழியாக—மனத்
தெண்ணியே தீர்த்தத்தி லேற்றிமேலாக
முந்தவே சங்கல்பம் செய்து—பண்டு
முற்றிய கர்மவினைகளைக் கொய்து (மஹா)

10. விண்ணோர்க்கரும் பரஞ்சோதி—பவம்
வீட்டிய முனையடி வாரடி போற்றி
புண்ய மஹாமஹ தீர்த்தம்—தோயப்
புகழுடம் பேற்கும் சிதம்பரன் மானே (மஹா)

11. ஆழ்கடலேய் விடமுண்ட—நம்
ஆதிகும்பேசரை யனுதினம் வேண்ட
மூழ்கி மஹாமஹந்தன்னில்—வினை
முற்றவொழித்துப் பணியீசன் முன்னில் (மஹா)

ஸ்நானம்செய்தபின் தானம்செய்முறை.

மகாமகத்துவமும், பெருமையும், புகழும், சிறப்பும், நீர்வளமும், நிலவளமும், குடிவளமு மிகுத்துள்ள பரதகண்டத்துள், பூமகள் திலதம்போன்று சிறப்புற்ற கும்பகோணமென்னும் திருப்பெயர் பெற்றுள்ள திவ்விய க்ஷேத்திரத்தில் பன்னிரண்டுவருடத்துக் கொருமுறை வரும் மகாமகோற்சவத்தின் ஆரம்பநாள்தொட்டு வரும் பத்தாநாள் மேற்படி தீர்த்தவிசேட ஸ்நானத்திற்கு இமயாசலமுதல் அணையாசலம்பெற்ற சேதுவரையுள்ள எத்தேசவாசிகளும் பக்திசிரத்தையோடு அன்பு மேவிட்டு இப்பெருமைபொருந்திய மஹாமஹ தீர்த்தஸ்நானம்செய்து பதினாறு விப்ரர்களுக்குப் பதினாறு ஆசனமிட்டு அமர்ந்திருக்கச்செய் தவர்கட்கு அர்க்கியபாத்ய ஆசமனாதிகளா லுபசரித்துச் சந்தனம், நறுமலர் முதலியவைகளால் பூசித்து பதினாறுவிதப் பழங்களைத் தனித்தனி யொவ்வொருவருக்கும் தானம்செய்து, பின் தங்கள் தங்கள் சக்திக்குத்தக்கவாறு பசு, கன்னிகை, பொன், குடை, வஸ்திரம், பூணூல், வேலைப்பெண், குதிரை, காளைமாடு, பால், அறுசுவையோடன்னம், பாயஸம், நிலம், தானியம், சந்தம், நவரத்தினம், தேன், உப்பு, இலவங்கம் இவைகளைத் தானங்கொடுத்துப் புது வஸ்திரத்தால் பதினாறு பிராம்மணர்களையும் போர்த்துத் தூபதீபமிட் டுபசரிப்பது பூர்வகால வழக்கமாக நடைபெற்றுவருவதாய் மேலோர் நூல்களால் வெளியாகிறது.

முற்றிற்று.

172543

இப்புத்தகம் :— கடம்பவனச் சொக்கலிங்க தேசிகர், 11-நிர். வீடு ஓதுவார் சந்து, கீழச்சித்திரைவீதி, மதுரை இவ்விலாசதாரிடத்திலுங் கிடைக்கும்.

தமிழ்ச்சங்கம் பவர்ப்பிரஸ், மதுரை—1920.

உ

முனையடுவார்நாயனார் குருபூஜை மடாலயத்தில் விற்கப்பெறும் புஸ்தகங்கள்.

தமிழ் ஆரப்பப்படிப்பு விலை	ரூ	0—1—0
தமிழ் இலக்க ஆரம்பவிளக்கம்	ரூ	0—1—0
மஹாமஹ தீர்த்த மாட்சிமை	ரூ	0—3—0
கற்புத்திருமலி	ரூ	0—4—0
பானங்களின் ஸம்வாத கேஸ்	ரூ	0—1—0
கொப்புடையம்மன் கொம்மி	ரூ	0—1—0

மானேஜர்,

முனையடுவார் நாயனார்குருபூஜை மடாலயம்,

பாளைச்செய்யூர்,

கமுதிப்போஸ்டு,

இராமநாதபுரம் சமஸ்தானம்.

9A
5-71